# NAMATHU EELANADU E-PAPER-NOVEMBER-2024



# ????????????????          ??????????????
# ??????



**???????? ????????**

உலகலாவிய ரீதியில் மாவீரர் தினம் மிகவும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்ற நிலையில் பிரித்தானியாவிலும் (UK) இந்நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரித்தானியாவின் ஒக்ஸ்போட் நகரில் அமைந்துள்ள உலகத்தமிழர் வரலாற்று மையத்திலலும் பிரித்தானிய மத்திய லண்டனில் உள்ள Excel அரங்கிலும் மாவீரர் நாள் நினைவுகள் மிகவும் உணர்ச்சி பூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது.

தமிழீழ நேரம் மாலை 6:05:00 க்கும் பிரித்தானிய நேரப்படி மதியம் 12.35 மணிக்கு விளக்கேற்றலுடன் நினைவேந்தல் ஆரம்பமானது. நிகழ்வில் மாவீரர்களின் பெருமை சொல்லும் தாயகப் பாடல்கள் கலை நிகழ்ச்சிகள் உரைகள் என்பன உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.









மாலதி




தேசிய மாவீரர் நாள்
துயிலும் இல்லம்










நெதர்லாந்து தலைநகர், ஆம்ஸ்டர்டாமில் மாவீரர் நினைவெழுச்சி நாள் உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது.

மாவீரர்களை நினைவுகூறும் முகமாக பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இதன்போது அனைத்து மாவீரர் உறவுகளும் தங்கள் மாவீரர் உறவுகளின் உருவப்படங்களுக்கு சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தப்பட்டுள்ளது.





# ???????? ??????? ????????????????? ??????????? ??????



அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில் இடைவிடாத கொட்டும் மழையிலும் மாவீரர்நாள் நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்டது.

மாலை 06.05மணிக்கு மணி ஓசை எழுப்பப்பட்டு, தொடர்ந்து அகவணக்கம் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து மாவீரர்களுக்கான பிரதான பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

அந்தவகையில் பிரதான பொதுச்சுடரினை மாவீரர் பாலுவின் சகோதரியும், மாவீரர் பொன்னம்பலம் அவர்களின் மனைவியுமான கமலாதேவி அவர்களால் பிரதான பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.











## [illegible]





மாவீரர் தினத்தையொட்டி மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் உணர்வுபூர்வமாக மாவீரர் நினைவு தினம் இன்றைய தினம் புதன்கிழமை (27) மாலை நினைவுகூரப்பட்டுள்ளது.

ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழு வினால் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

மேலும். தமிழர் தாயகத்திற்காக உயிர் நீத்த உறவுகளை நினைவு கூரும் வகையில் கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி மாவீரர் தினம் வருடா வருடம் நினைவு கூறப்பட்டு வருகிறது.

அதற்கு அமைவாக மன்னார் மாவட்ட மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு இன்று புதன் (27) மாலை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

---

# ?????? ???????? ?????????? ?????????????? ??????



யாழ். தீவகம் சாட்டி துயிலும் இல்லத்தில் இன்று மாலை 06.05 மணி ஒலி எழுப்பப்பட்டு ஒரு கரும்புலி மாவீரர் உட்பட மூன்று மாவீரர்களின் பெற்றோரால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்களால் சுடர்கள் ஏற்றப்பட்டு மாவீரர்கள் நினைவு கூரப்பட்டனர்.

மேலும், நினைவு கற்களுக்கு மலர்மாலை அணியப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

















# ?????????????? ??????????????
# ??????????? ??????????



முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இரணைப்பாலை பகுதியில் விதைக்கப்பட்ட மாவீரர்களின் நினைவாக அதே இடத்தில் இம்முறையும் மாவீரர் நாள் நிகழ்வுகள் சிறப்பாக நினைவுகூரப்பட்டுள்ளது.

கொட்டும் மழைக்கு மத்தியிலும். இரணைப்பாலை மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிலையில் இரணைப்பாலை துயிலும் இல்லத்தில் தங்கள் பிள்ளைகளை நினைவுகூர பெருமளவான மக்கள் இன்று மாலை ஒன்று திரண்டு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.





?????????????, ??????????????????

????????????????? ??????????????

??????





அம்பாறை – திருக்கோவில், கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லம் அருகே மாவீரர்களுக்கு உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்திப்பட்டுள்ளது.

கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள இடமானது அரச காணி என்பதால் அங்கு அதிகளவான பொலிஸார் பாதுகாப்பு கடைமைகளில் ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பொலிஸாருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருக்கிடையில் சிறிய வாக்குவாதம் ஒன்றும் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

எனினும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் பொதுமக்கள் அங்கு சென்று தங்களுடைய உறவுகளை சுடர் ஏற்றி நினைவு கூர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

---

# ???????????? ?????????? ?????????????????? ????????? ???????? ????




திருகோணமலை ஆலம்குளம் துயிலுமில்லத்தில் கொட்டும் மழையிலும் காற்றிலும் மக்கள் உணர்வுபூர்வமாக

சுடரேற்றி வணக்கம் செலுத்தினர்.







கோப்பாய் துயிலும் இல்லம் முன்பாக உள்ள தனியார் காணியில் மாவீரர் நாள் நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு, கொட்டும் மழைக்கு மத்தியில் இன்று மாலை நடைபெற்றுள்ளது.

இதன்படி மாலை 06.05 மணிக்கு இரண்டு மாவீரர்களின் தாய் பொது சுடரேற்றியதோடு மாவீரர்களின் உறவுகளும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.





# [illegible]




இலங்கை போரினால் இறந்தவர்களை கணக்கெடுக்கும் செயல்திட்டம் மாவீரர் நாளாகிய இன்று நவம்பர் 27 லண்டன் அக்ஸ்போரட் உலகத்தமிழர் வரலாற்று மையத்தில் முன்னெடுக்கப்பட்டது. இலங்கையில் இடம் பெற்ற உள்நாட்டு போர் 2009ஆம் ஆண்டு நிறைவுக்கு வந்த நிலையில் இன்று வரை யுத்தத்தால் கொல்லப்பட்டவர்களின் பட்டியலோ யாரிடமும் இல்லை. இதனால் இறந்தவர்களை கணக்கெடுக்கும் செயல் திட்டத்தை சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்டத்திற்கான அமைப்பு (ITJP) மற்றும் மனித உரிமைகள் தரவு ஆய்வுக்குழு (HRDAG) ஆகிய அமைப்புக்கள் முன்னெடுத்து வருகின்றன.

இந்நிலையில் உலகத் தமிழர் வறலாற்று மையத்தில் இடம்பெற்ற மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் கலந்துகொண்ட பெரும்திரளான புலம்பெயர் தமிழர்களிடம் இறந்தவர்களை கணக்கெடுக்கும் செயல்திட்டம் தொண்டர்களால் முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி இந்நிகழ்வுகளில் கலந்துகொண்ட தொண்டர்கள் கருத்து தெரிவிக்கையில் இலங்கையில் இடைக்கால நீதி பொறிமுறை மற்றும்பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி என்பவற்றிற்கு இச் செயற்திட்டம் அத்தியாவசியமாக இருக்கின்றமையால் மிகுந்த ஆர்வத்துடன் பணியில் தாமாக முன்வந்து ஈடுபடுவதுடன் ஈழ மண்ணின் விடுதலைக்காய் உயிர் நீத்த வரலாற்று நாயகர்களின் கனவை நினைவாக்க எம்மாலான சிறு பணியை செய்வதில் மன நிறைவடைவதாக தெரிவித்தார்கள். மேற்படி செயற்திட்டத்தில் செயற்பாட்டாளர்களான அனுசன் பாலசுப்பிரமணியம், ஜனார்த்தனன் ஈஸ்வரன், விஸ்வா றமேஸ், நிறோஜன் பாலசிங்கம், விதுஷன் மார்க்கண்டு, கஜானந் சுந்தரலிங்கம், ஆரகன் ஜெயக்குமார், ஆகியோர் கலந்துகொண்டனர்.


HRDAG
JOIN


COUNTING THE DEAD PROJECT
COUNTING THE DEAD
COUNTING THE DEAD
COUNTING THE DEAD


SRI LANKA: COUNTING THE DEAD PROJECT
Worldwide Initiative to Name and Count the Dead from Sri Lanka's War
HRDAG
COUNTING THE DEAD


# [illegible]



பிரித்தானியாவில் இன்று மாவீரர் பெற்றோர் மற்றும் உருத்துடையோர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

ஈழ விடுதலைக்காக தமது இன்னுயிர்களை தியாகம் செய்த மாவீரர்களை நினைவு கொள்ளும் கார்த்திகை மாதத்தில் இன்றைய தினம் (17) ஞாயிற்றுக்கிழமை பிரித்தானிய உலகத்தமிழர் வரலாற்று மையத்தில் மேற்படி நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

காலை 11.00 மணியளவில் பண்ணிசை அணிவகுப்படன் மாவீரர் குடும்பங்கள் உலகத்தமிழர் வரலாற்றுமைய வளாகத்திற்கு வரவேற்கப்பட்டு பின்னர் அங்கு அமைக்கக்பட்டுள்ள பிரமாண்ட மண்டபத்தில் மதிப்பளிக்கும் நிகழ்வு உணர்வு பூர்வமாக இடம்பெற்றது.
















மாவீரர் குடும்ப மதிப்பளிப்பு 2024